# அரசாங்க சேவை ஆணைக்குழு

## நாடளாவிய சேவைகளின் பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சையை நடாத்துதல் பற்றிய அறிவித்தல்

அரசாங்க சேவையின் நாடளாவிய சேவைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதன் பொருட்டு அந்தந்த சேவைகளுக்கென வெவ்வேறாகப் பரீட்சைகளை நடாத்துவதற்குப் பதிலாக ஒரு போட்டிப் பரீட்சையின் மூலம் தகைமையுடையவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு 2020 நவம்பர் 09 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக இப் பரீட்சையைப் பின்வருமாறு நடாத்துவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

1. <u>பரீட்சைக் கட்டமைப்பு :-</u>

   இப் பரீட்சையானது இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்ததாகும். அதாவது,

   பகுதி 1 – (பொதுப் பகுதி)

   பகுதி 2 – (அந்தந்த சேவைகளுக்கென குறித்துரைக்கப்பட்ட பகுதி)

   <u>பகுதி 1 - :-</u> இப் பகுதியானது அனைத்து நாடளாவிய சேவைகளுக்கும் பொதுவானது என்பதுடன், அது பின்வரும் இரண்டு பாடங்களுக்கான 2 வினாப்பத்திரங்களைக் கொண்டமைந்தது.

   வினாப்பத்திரம் 1 : நுண்ணறிவுப் பரீட்சை

   வினாப்பத்திரம் 2 : கிரகித்தல்

   <u>பகுதி 2 :-</u> மேற்குறித்த பகுதி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பாடங்களுக்கு மேலதிகமாக அந்தந்த நாடளாவிய சேவைகளுக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் மேலும் பாடங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் குறித்த பாடங்கள் பகுதி 2 இன் கீழ் உள்ளடங்கும். (அந்தப் பாடங்கள் பற்றிய விபரங்கள் விண்ணப்பங்கள் கோரப்படும் சந்தர்ப்பத்தில் குறிப்பிடப்படும்.)

2. <u>பரீட்சை நடாத்தப்படும் முறை :-</u>

   அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைப்படி பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இப் பரீட்சையானது வருடாந்தம் குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் நடாத்தப்படும். நிகழ்நிலை (Online) மூலமாக விண்ணப்பங்கள் கோரப்படுவதுடன், விண்ணப்பதாரி தான் தகைமை பெறும் நாடளாவிய சேவைகள் அனைத்திற்கும் ஒரே விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பிக்கக் கூடிய வாய்ப்பு வழங்கப்படும். அதன் போது விண்ணப்பதாரி அந்தந்த சேவைகளுக்கென அடையாளமிடும் விருப்பத் தேர்வு ஒழுங்கினைப் பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

   இப் பரீட்சையானது கொழும்பிலும் வெளிப்புறப் பிரதேசங்களிலும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடாத்தப்படும். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட மாட்டாது என்பதுடன், பரீட்சார்த்திகள் இணையத்தளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளல் வேண்டும்.

பரீட்சையின் பகுதி 1 இற்கு (பொதுப் பகுதி) அனைத்துப் பரீட்சார்த்திகளும் தோற்றுதல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையும், இரண்டு வினாப்பத்திரங்களுக்குமான புள்ளிகளின் கூட்டுத்தொகையாக 100 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையும் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகள் மாத்திரம் பரீட்சையின் பகுதி 2 இற்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர். பரீட்சையின் பகுதி 2 இற்கு ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தகைமை பெற்றுள்ளாரா இல்லையா என்பது குறித்து அறிவிக்கப்படும்.

ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தாம் விண்ணப்பித்துள்ள அனைத்துப் பாடங்களுக்கும் தோற்றக் கூடியவாறு பகுதி 2 இற்கான பரீட்சை நேர அட்டவணை தயாரிக்கப்படும்.

3. <u>நாடளாவிய சேவைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் முறை :-</u>

இப் பரீட்சையின் போது பரீட்சார்த்திகள் அந்தந்த சேவைகளுக்கு அமைவாகப் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு அந்தந்த நாடளாவிய சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்ந்தெடுக்கப்படுவர். அவ்வாறு தேர்ந்தெடுப்பதன் பொருட்டு இப் பரீட்சை முறையை ஏற்புடையதாகக் கொள்ளும் வகையில் அந்தந்த நாடளாவிய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக்களைத் தேவைக்கேற்ப திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2021 ஆம் அண்டு முதல் இப் பரீட்சை முறையானது நடைமுறைப்படுத்தப்படுவதுடன், பின்வரும் சேவைகள் மற்றும் பிரிவுகளுக்கு இப் பரீட்சை முறையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பிரமாணக் குறிப்புத் திருத்தங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - திறந்த பிரிவு
2. இலங்கை கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - திறந்த பிரிவு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பிரிவு
3. இலங்கை திட்டமிடல் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - திறந்த பிரிவு
4. இலங்கை விஞ்ஞான சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - திறந்த பிரிவு
5. இலங்கை கட்டிடக் கலைஞர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - திறந்த பிரிவு

சேவைப் பிரமாணக் குறிப்புக்களைத் தேவைக்கேற்ப திருத்தம் செய்ததன் பின்னர் ஏனைய நாடளாவிய சேவைகளுக்கும் எதிர்காலத்தில் இப் பரீட்சை முறையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எவ்வாறாயினும், அவ்வாறு திருத்தம் செய்யப்படும் வரை அந்தந்த சேவைகளுக்குத் தற்போது காணப்படும் பரீட்சை முறையானது மாற்றமின்றி செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

எம்.ஏ.பீ. தயா செனரத்
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு

1200 /9
ரஜமல்வத்த வீதி
பத்தரமுல்ல
2021.04. ७६